Tamil

# வசந்தம்

www.vasanthamtamil.com البشرى
மாத இதழ் The Spring
வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!
VASANTHAM Tamil Monthly 6-9 ஜனவரி 2012 JANUARY 2012 مجلة الربيع -باللغة التاميلية - ملحق مجلة البشرى




2012 செய்தியின் நாயகி: கோபக்கார இந்திய குமரி!

## பலாத்கார பேயாட்டம்..! பரிதவிப்பில் பாரதம்..!!



## ஹலால் விழிப்பு உணர்வு கருத்தரங்கம்..!

எவர்கள் அல்லாஹ்வோடும் அவனுடைய தூதரோடும் போரிடுகின்றார்களோ, மேலும் பூமியில் கலகம் விளைவிக்க தீவிரமாக முயற்சி செய்கிறார்களோ அவர்களுக்குரிய தண்டனை இதுதான்: அவர்கள் கொல்லப்பட வேண்டும் அல்லது தூக்கில் ஏற்றப்பட வேண்டும் அல்லது அவர்களுடைய மாறுகை, மாறுகால்கள் வெட்டப்பட வேண்டும் அல்லது அவர்கள் நாடுகடத்தப்பட வேண்டும். இது அவர்களுக்கு உலகில் கிடைக்கும் இழிவாகும். மேலும், மறுமையில் அவர்களுக்கு இதைவிடக் கடுமையான தண்டனை இருக்கிறது.

திருக் குர்ஆன் 5:33

# பலாத்கார பாதகர்கள்..!
## உலை ஏற்றப்பட வேண்டிய ஊதாரிகள்..!!



# வசந்தம்

VASANTHAM
Tamil Monthly
January 2013 ஜனவரி 2013
மலர் 6 இதழ் 9

Chief Patron
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

General Supervisor
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

Editor
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

Editorial Board
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

Initial Lay-out
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency

PUBLISHER வெளியீடு

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية



CONTACTS தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
Editor's Desk
22447526, 22444117 | Extn: 208
Mob 97848068 -97266683 (Hotline)
FAX: 22400057
Attn: IPC—VASANTHAM
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
ipc.org.kw
vasanthamtamil.com

SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
facebook/vasanthamtamil
www.twitter/vasantham2k
YouTube Scribd.


# இந்த இதழில்





04
முகப்புக் கட்டுரை
மு.அ. அப்துல் முஸவ்விர்
**பலாத்கார பேயாட்டம்..! பரிதவிப்பில் பாரதம்..!**

பேட்டி
முஹம்மத் ஜின்னா
09



**"ஒருமைப்பாடு அவசியம்..!"**

02 வாசகர் சுகந்தங்கள்
வாசக நெஞ்சங்களிடமிருந்து.!

03 தலையங்கம்
ஆசிரியரிடமிருந்து.!

08 பேட்டி
M.H. ஜவாஹிருல்லாஹ்

13 ஆய்வு
இளவேனில்

14 குரல்கள்
மர்வான்

16 மழலையர் சோலை
சவுந்தர்யம்

18 வலைப்பக்கம்
அபூ மதீஹா

19 சுற்றத்து செய்திகள்
அழகிய சிறியவன்

20 போட்டி
புனித ரமளான் போட்டி 2012 முடிவுகள்

கவித்தூறல்கள்
கவிஞர் பொத்துவில் அஸ்மின்
15



**" உம்மா நான் ஸவூதிக்குப் போறேன்..!"**

IPC வழித்தடங்கள்
அப்துல்லாஹ்
10



**'ஹலால்' ஆகுமான உணவே சிறந்த உணவு., ஏன்..?**

விருந்தினர் பக்கம்
ஹஜ்ஜுல் அக்பர்
17



**நனைந்தாள் ரிஸானா..! அழுதது உலகம்.!! ஏன்..?**

بريد الربيع- كلمة العدد اسباب- الزنا بالجبر- اسباب الزنا لماذا اهتم الإسلام بلزوم الحلال - أهمية الإعلام الإسلامي - أنشطة اللجنة -نشيدة- صفحة الأطفال - من هو خير الناس؟ - العبر للحرب بدر -أخبار العالم – نتايج مسابقة

வாசக நெஞ்சஹ்களிடமிருந்து..!




# இல்வாழ்க்கையின் இனிய இதம்..!
# வசந்தம் வீசியது சாமரம்..!!

வசந்தம் டிஸம்பர் இதழ் கண்டேன். ஊடகத்துறையின் பல்வேறு முகங்களை, அரிய விஷ யங்களை விலாவாரியாக, அழகிய முறையில் எடுத்துரைத்தது.தில்லி பலாத்கார சம்பவம் குறித்த ஆசிரியர் தலையங்கம் நல்ல தீர்வை முன்வைத்தது.குற்றவியல் சட்டங்களை கண்டிப்பான முறையில் அமல்படுத்தப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது..!

**அப்துல் ஹலீம்**
**தர்மபுரி - தமிழகம்**
**அபூஹலீஃபா - குவைத்**

தொடருவோர்..!
• Zee Ya
•Ilumnnisha Nisha
• Ahamed Ashik
• Roomy Mohd
• Rizwana Fathima
• Angel Binth Kiyaz
இன்னும் பலர்..!

தொடருவோர்..!
M.H.Mohamed Hasheer
Mohamed Aashik
Nader Bilal

தில்லி பலாத்காரம் குறித்த ஆசிரியர் எண்ணங்கள் ரொம்பவும் வித்தியாசக் கோணத்தில் அமைந்தது. இறைச்சட்ட அமலாக்கத்திற்கு அழகிய, ஏற்பான முறையில் தலையங்கம் வரைந்த ஆசிரியருக்குப் பிரத்யே நன்றிகள்!இதுகுறித்து சமூகம் நிச்சயம் சிந்திக்க வேண்டும்.

மர்யம் ஜமீலா போன்ற மாமேதையின் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக தந்து நினைவுகூர்ந்த வசந்தத்துக்கு நன்றிகள். இறைவன் மர்யம் அவர்களின் பிழைகளை மன்னித்து அந்த மாமேதையை சுவனத்தில் நுழைவிப்பானாக..!

**அஸ்மா**
**தஞ்சை - தமிழகம்**
**ருமைதியா - குவைத்**

வசந்தம் இல்லறச் சிறப்பிதழ் கண்டேன். அனைத்துக் கட்டுரைகளும் அருமை. என் கண்கள் சுமந்த கனவுகளெல்லாம்.., கவிதை படித்து என் கண்கள் கண்ணீரை சுமந்தன..!

**T. நியாஸ் அஹமத்**
**அபிவிருத்தீஸ்வரம் தமிழகம்**
**மங்காஃப் - குவைத்**

இச்சைக்கு மட்டுமா இல்வாழ்க்கை- நூல் அறிமுகம் அந்த நூலை வாங்கிப் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. காலத்துக்கு உகந்த நூல்..! அதேபோல், சுற்றத்து செய்திகளில், இல்லறம் தொடர்பான செய்திகளையும் தந்து அசத்திவிட்டீர்கள்..! வசந்தம் மிக பயனுள்ள படைப்புக்களைத் தருகின்றது தமிழுலகுக்கு..! மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.,!

**இளவரசு**
**சென்னை - தமிழகம்**
**சால்மியா - குவைத்**

இல்லறச் சிறப்பிதழ், பின்அட்டை உள்பக்கத்தில் வந்த திருக் குறளும்,வசந்த அறிமுகம் குறித்த பாணியும் நல்ல செய்தியைச் சொல்கின்றன. மிகவும் பொருத்தமான படங்களுடன் அழகிய சொல்லாடல்களுடன் வெளிவரும் வசந்தம் மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்..!

**வாசுகி**
**ஸ்ரீரங்கம் - திருச்சி**
**ஃபர்வானியா - குவைத்**

"வசந்தம்" இதழுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை மனப்பூர்வமாய் சொல்லிக் கொள்கிறேன்..!



http://www.facebook.com/malikka.farook

"ஆண்டவன்" இல்லை..! மாஷா அல்லாஹ். அற்புதமான வரிகள்..!



http://www.facebook.com/ ahamedsameed



அன்பு வாசகர்களே.., படைப்பாளர்களே..! உங்கள் படைப்புக்களை அனுப்பும்போது குறைந்தபட்சம், மின்னஞ்சல் முகவரி,செல்லிடைப்பேசி எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிடுங்கள்..!படைப்புகள் அனைத்தையும் சுருக்க,திருத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு..!

அன்பின் சகோதர-சகோதரிகளே..!

பலாத்காரத்தால் பலியான இந்திய சகோதரியின் மறைவால் கோபக்கார இந்தியா கொதித்த சூடு அடங்குவதற்குள்,மரணதண்டனை விதிக்கப்பட்ட இலங்கை சகோதரி ரிஸானாவின் மறைவால் இலங்கையில் விவாத சர்ச்சைகள் சூடுபிடித்து நிற்கின்றன.

## "என்னய எப்டியாவது நாட்டுக்கு கூட்டிட்டு போங்கம்மா..!"



ரிஸானா விவகாரம் எந்த வகையில் அணுகப்பட வேண்டும் என்பது குறித்து பல்வேறு அம்சங்கள் முகநூலிலும் இன்னபிற ஊடகங்களிலும் விவரம் அறிந்தோர் மத்தியிலும் குறிப்பாக ரிஸானா சார்ந்த இலங்கை நாட்டிலும் பல கோணங்களில் அலசப்படுகின்றன.

இந்த விவகாரத்தை எப்படி அணுகுவது..? யார் குற்றவாளி..?

முதலில், இரு உயிர்கள் (ரிஸானா மற்றும் இறந்த ஸவூதி குழந்தை) பற்றிய இந்த பிரச்னையில் பல்வேறு அம்சங்கள் இருப்பினும் நான்கு அதிமுக்கிய கோணங்களில் இதைக் காணலாம்.

ஒன்று: ரிஸானா குற்றவாளி,தண்டனை கிடைக்க வேண்டும்.

இரண்டு:ரிஸானா நிரபராதி,சட்டம் குற்றவாளி

மூன்று:ரிஸானா குற்றவாளி,பாதிக்கப்பட்ட குடும்பம் மன்னிக்கக் கூடாது.

நான்கு:ரிஸானா குற்றவாளி அல்லது நிரபராதி, பாதிக்கப்பட்ட குடும்பம் மன்னித்திருக்கலாம்.

இதில் முதல் நிலைப்பாடு பாதிக்கப்பட்ட ஸவூதி குடும்பத்தினுடையது.

இரண்டாவது, இஸ்லாத்தின் குற்றவியல் சட்டங்கள் மீது காழ்ப்புணர்வு கொண்டிருக்கும் நவீனத்துவ முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத சில மக்களின் நிலைப்பாடு.

மூன்றாவதை யாருமே சொல்லக்கூடியவர்கள் அல்லர், பாதிக்கப்பட்ட அந்த குடுமபத்தின(ர்களில் ஒரு சில)ர் தவிர!

நான்காவதாவது நடந்திருக்காலாமே என்பது ஒட்டுமொத்த மக்களின் நினைப்பாக இருந்தது, பாதிக்கப்பட்ட அந்த குடுமபத்தின(ர்களில் ஒரு சில)ர் தவிர!

இனி விஷயத்துக்கு வருவோம்!இஸ்லாமிய குற்றவியல் சட்டப்படி தண்டனை தரப்பட்டிருப்பின் அதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை. உண்மையில் ரிஸானா குற்றவாளியா.,இல்லையா..? என்பதை ஆராய இந்த தலையங்கம் வரையப்பட வில்லை. அதெல்லாம் நீதிமன்ற வழக்காடு முறைமைகளில் அலசப்பட வேண்டிய விஷயங்கள்! குற்றங்கள் அவைகளின் நடைமுறை சார்ந்த தளங்களில்தான் அணுகப்பட வேண்டுமே அன்றி பால்,நாடு சார்ந்த அம்சங்களில் அல்ல..!

எனவே,இஸ்லாமியக் குற்றவியல் சட்டங்களை காட்டுமிராண்டித்தனமானதாகவும், அதனைப் பின்பற்று வதில் குறைந்தபட்சமாவது திகழும் ஸவூதி அரேபியா மற்றும் மன்னர் குடும்பத்தையும் குற்றவாளிகளாக விமர்சிப்பதும் எந்த அடிப்படையில் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

சட்டம் செய்த கடமையை உணர்ந்திருப்பதால்தான், பொருளாதாரத்தால் ஏழ்மையில் இருக்கும் ரிஸானாவின் தாயார் "என் பிள்ளையை அல்லாஹ்தான் கொடுத்தான்.அல்லாஹ்வே எடுத்துக்கிட்டான்.இஸலாமிய ஷரீஅத் சட்டத்தை நான் மதிக்கின்றேன்" என்று கூறி இறைநம்பிக்கையால் இணையில்லா செல்வந்தராக உயர்ந்துவிட்டார்.

ரிஸானா தவறிழைத்தாரா இல்லையா என்பது இருவருக்கு மட்டுமேதான் தெரியும்.

ஒன்று சுயம் ரிஸானா..!இரண்டாவது இதயங்களின் இரகசியங்களை அறிந்த அந்த ஏக இறைவன்!

ரிஸானா போன்றோரின் மனஇரகசியத்தை குறைந்தபட்சம் உலகநீதிமன்ற நீதிபதிகள் அறிய முடியுமானால் பிரச்னையே இல்லையே.! ஆனால்,ஏகஇறைவனைத் தவிர மன இரகசியத்தை யார்தான் அறிய முடியும்..?

குற்றவாளியா., இல்லையா என்று ஆராய்வீர்களானால்.., குற்றவாளிப் பட்டியல்கள் நீண்டுகொண்டே போகும்..!

இன்று ரிஸானாவின் ஏழ்மையை அவளுடைய இயலாமையுடன் முடிச்சு போட்டு அதனை அவிழ்க்க முடியாமல், இஸ்லாமிய சட்டங்களை கடப்பாரை போன்ற வன்மம் மிக்கதாகக் கூறுவோர், அதே ரிஸானா படிப்பில் கெட்டியாக இருந்தும், 9-ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி குடும்பத்துக்காக விமானம் ஏறினாளே.., அப்போது எண்ணிப் பார்க்காதிருந்த அந்த 'அக்கறைவான்கள்' கொண்ட சமூகத்தினர் குற்றவாளிகளா..?

போலி சான்றிதழ் தந்து அவளின் ஏழ்மையை இன்று தூக்குக் கயிற்றுக்கு விலை பேசிவிட்ட முகவர்கள் குற்றவாளிகளா?

தனது ஊரில் வசிக்கும் ஒரு ஏழை முஸ்லிம்



**மு.அ.அப்துல் முஸவ்விர்**

**ஓடும் பேருந்தில் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம், இந்தியாவில் பெண்களுக்கு எதிராக நடந்து வரும் குற்றங்களின் உச்சகட்டம்..! இதைச் சமூகமும் உச்சபட்சமாக உணர்ந்ததன் விளைவே தலைநகரே ஸ்தம்பிக்க நடந்த போராட்டம்..!! அதன் தொடராக நாட்டின் பல இடங்களிலும் கிளர்ந்தெழுந்த கிளர்ச்சிக்களம்..! அதனால் வெகுண்டெழுந்தது கோபக்கார இந்திய குமரியின் கோபம்..!!**

இந்தியத் தலைநகர், தில்லியில், உடற்பிணி நீக்கு (பிஸியோ தெரபி) அறிவியல் பயிலும் 23 வயது மாணவி ரீமா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), ஓடும் பேருந்தில் பாலியல் வல்லுறவுக்கு (கற்பழிப்பு எனும் சொல்லாடலுடன் எமக்கு உடன்பாடு இல்லை,கற்பு என்பதை வெறும் பெண்ணுக்குரியதாய் அது உணர்த்துவதால்..!) ஆளாக்கப்பட்ட சம்பவம், இந்தியாவில் பெண்களுக்கு எதிராக நடந்து வரும் குற்றங்களின் உச்சகட்டம்..!சுமார் 30 கி.மீ தூரம் வரை பயணப்பட்ட அந்தப் பேருந்தில் ஓட்டுநர் உட்பட ஐவர் மாறி மாறி அந்த வனிதையுடன் வல்லுறவு கொண்டு அரங்கேற்றிய கொடூரத்தின் உச்சமாக,அவரையும் அவருடன் பயணப்பட்ட நண்பரையும் ஓடும் பேருந்திலிருந்து தூக்கி எறிந்தனர். அவள் மரணத்தை எதிர்கொண்டாள்.,!

பின்னர், தில்லியின் கல்லூரி மாணவ - மாணவிகளும், பொதுமக்களும் கைகோர்க்க... போராட்டக்களமாக மாறியது இந்தியா கேட். நாடாளுமன்றத்திலும் விஷயம் எதிரொலிக்க..., குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை, என்கிற குரல் உரக்க ஒலிக்கிறது.

இதில் மனதை நெருடும் மற்றொரு விஷயம் என்ன தெரியுமா..?பஸ்ஸிலிருந்து தூக்கி எறியப்பட்ட மாணவி, காயங்களுடன் நிர்வாணமாக நடுரோட்டில் கிடந்துள்ளார். போலீசார் வரும்வரை ஒரு துணியை அவர் மீது போர்த்தக்கூட யாரும் முன்வரவில்லை என்பதுதான்.,!

சம்பவத்தின் கோரம், இந்திய மங்கையை குறிப்பாக, பதின்பருவ பாவையரை கோபக்கார குமரியாக கொதித்தெழ வைத்தது.

ஆம்..!அவர்களையே, 2012-இன் செய்தி நாயகியாக வசந்தம் முன்வைக்கின்றது..

தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவி பிரதீபா சர்மா-வின் ஆவேசம் கோபக்கார இந்திய குமரி ஒவ்வொருவரின் குரலாக எதிரொலிக்கின்றது, பரந்து விரிந்த பாரதம் முழுவதும்:- **நம் நாட்டில் பெண்களுக்கு எதிராக தொடர்ந்து நடந்து வரும் குற்றங்களில் இந்தச் சம்பவமே கடைசியாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு முடிவு கட்டாமல் எங்கள் போராட்டம் ஓயாது..!**

குமரியர் மட்டுமல்ல, அவர்களைப் பெற்றவர்களும் கொதிக்கின்றார்கள்:- **பாலியல் வல்லுறவு வழக்குகள் பலவும், பத்து வருடங்களுக்கு மேலாக, முடிவடையாமல் நிலுவையில் உள்ளதாக செய்திகள் வருகின்றன. இவர்கள் விஷயத்தில் மனித உரிமைகளைப் பார்ப்பது பாவமாகிவிடும். குற்றங்கள் நடக்காமல் தடுக்கவும், குற்றவாளிகளுக்கு துணைபோகாமலிருக்கவும் போலீஸார் உறுதி எடுக்க வேண்டும். அப்போதுதான் என் மகள் மற்றும் பேரக் குழந்தைகள் இந்த நகரத்தில் பாதுகாப்பாக இருக்க முடியும்!"** எனச் சீறினார் போராட்டத்திலிருந்தவர்களில் ஒருவரான முதியவர் சாய்ராம் ராத்தோட்.

இப்பொழுது, மங்கையர் சார்ந்த பிரச்சனைகளின் ஆழத்திற்குப் போவோம்..!சற்று சிந்தியுங்கள்!

மாபெரும் இதிகாசமென பாரத நாடு கொண்டாடும் அந்த மகாபாரத,த்தில் மனைவியை வைத்து சூதாடுகிறார்கள் பாண்டவர்கள்.அறிவிற் சிறந்த பெரியோரும்,மூத்தோரும் கூடியிருக்கும் அந்த சபையில் துகிலுரியப்படும் போது ஐந்து கணவர்களோ, அல்லது வீரத்திலும்,அறிவிலும் சிறந்த பெரியோர்களோ காப்பாற்றும் திறனை இழந்து விட்டு.., கிருஷ்ணனை அழைக்கின்றார்கள்..!இந்தியப் பெண்களை பாஞ்சாலியின் நிலையில் வைத்துப் பார்த்தால், இரண்டு காட்சிகளுக்கும் வித்தியாசங்களைக் காண முடிகின்றதா..?

அனைத்துக்கும் என்ன காரணம்..?

ஆம்..! பண்பாட்டு சிறப்பு பேசும் நம் நாட்டில் பெண்களின் பெயரால் நதிகளும்,மலைகளும் ஏன் பூமியே தாய் என்று போற்றப்படுவதும் மறுப்பதற்கில்லை. ஆனால், இங்கு பெண் என்பவள் ஆணின் உடமை,அவள் ஒரு நுகர்பொருள்..,

2012 செய்தியின் நாயகி: கோபக்கார இந்திய குமரி!

# பலாத்கார பேயாட்டம்..! பரிதவிப்பில் பாரதம்




அவ்வளவுதான்!அப்படித்தான் இந்த கலாச்சாரம் சொல்லிக் கொடுத்திருக்கிறது..,பழக்கிக் கொடுத்திருக்கின்றது.இங்கு பெண் தெய்வங்கள் வணங்கப்படுவதும், நிஜத்தில் பெண்ணுக்கு இழைக்கும் கொடுமைகள் ஏற்படுத்தும் குற்ற உணர்வினால் மட்டுமே தவிர வேறு காரணம் என்ன இருக்கும்..? ஒரு வன்மம் நடந்தால் மட்டுமே அது பற்றி அலசுகின்றோமே தவிர, அதன் காரண காரியங்களையும் தீர்வையும் முன்வைக்கின்றோமா..?பாலியல் வல்லுறவு என்பது கடைந்தெடுக்கப்பட்ட வன்முறை மட்டுமல்ல, மனிதத் தன்மையற்ற செய்கையின் கொடூரத்தனம்..!

இந்தக் கொடுமையை செய்த அந்த இளைஞர்கள் இவ்வளவு கொடூரமாக நடந்து கொள்ள தூண்டியது எது..? அத்தகைய 'தைரியத்தை" தந்தது எது..? என்பதை சிந்தித்தோமா..?

பார் போற்றும் என் பாரத மண்தேசத்து ஆண்கள் மனதில் சகபெண்களின் மீது இவ்வளவு வன்மமா? இதை வெறுமனே பாலியல் இச்சை என்று நாம் நோக்கினால், எமது சிந்தனைப் பாங்கு குறுகிய வட்டத்துக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றது என்பதே பொருள்..!

இதுபோன்ற சம்பவங்களுக்கு என்ன காரணம்..?

முதலில், தனிமனித ஒழுக்கம் தான்தோன்றித்தனத்தின் புதைகுழிக்குள் அமுங்கிவிட்டது.!கவர்ச்சியையும் ஆபாசத்தையும் கடைச்சரக்காக்கி தனிமனித ஒழுக்கவுணர்வை புதைக்கும் மனோபவத்துக்கு எதிர்ப்பு வெறும் பெயரளவில் நின்றுவிட்டது.மாறாக, அதனைக் காசாக்கும் அதே மக்கள் இன்று குட்டைப் பாவாடையுடன் தில்லி சம்பவத்தைக் கண்டித்து கடைபரப்பி நின்றார்கள்..!

திரையுலகம் சார்ந்த ஊடகம் முழுவதுமே இந்த வன்நிகழ்வுகளுக்கு காரணம் என்று சொல்ல முடியாது என்பது எவ்வளவு உண்மையோ, இதுபோன்ற நிகழ்வுகளின் உந்துதல்களுக்கு முழுமுதல் ஆத்திச்சூடி பயிலப்படுவது திரையுலக சார் ஊடகங்களிலிருந்துதான் என்பதும் அதனைவிட பலமான உண்மை..!

ஆடைக்குறைப்பை குறை சொல்வோரை நோக்கி., பெண்ணியவாதிகள் விரல் நீட்டுவதும்,பெண்ணியத்தின் பெயரால்.., இயக்கங்கள் தம்சார்பு நிலையை முன்வைப்பதும்தான் மாறி மாறி நடக்கின்றதே தவிர முடிவின் உன்னத நிலைக்கு பாரதப் பண்பாட்டை நிலைநிறுத்த எவருக்கும் திராணி இல்லை..!

90-களில் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த நடிகை குஷ்பூ (கல்யாணம் இன்றி உறவு கொள்ளலாம் என்று தத்துவம் பேசிய அதே குஷ்பூதான்) அன்றைய பிரபல தமிழ் வாரஇதழ் ஒன்றில் பேட்டியளிக்கும்போது இவ்வாறு கூறினார்:- **இந்த அழகான உடலை வைச்சுகிட்டு ரசிகர்களோட உணர்ச்சிகளைத் தூண்டனும். அதுதான் சினிமா தயாரிப்பாளர்கள் எங்ககிட்ட எதிர்பார்க்கிற முதல் தகுதி. அப்புறம்தான் நடிப்புக்கே முக்கியத்துவம்!"** (ஆனந்த விகடன்:14.07.1991)

பாருங்கள்!இவர் தூண்டிவிட்ட உணர்ச்சிகளுக்கு வடிகாலை இளைய சமூகம் எங்கு போய் தேடுகின்றது..?



அதே நடிகையரின் இனமாகிய பெண்ணினத் திடம்தானே..! கேட்டால் We are doing for what we paid என்பார்கள்..!

எனவே.., திறந்தவெளியாய் அல்லது இலைமறை காயாய்.., அந்தரங்கங்களை அதகளப்படுத்திவிட்டு ஏற்படும் விளைவுகளுக்கு பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் முடிவுதான் என்ன..?அதற்கு பரஸ்பரம் கூறிக்கொள்வதெல்லாம் சரிப்பட்டு வராது என்பதுதான் உலகம் கண்டு வருகின்ற உண்மை..!

யதார்த்தத்தின் அடிப்படையில், உண்மையின் வெளிச்சத்தில் ஒரு தீர்வைக் கண்டால்தான் இதுபோன்ற நிகழ்வுகளைக் களைய முடியும்..!

என்னவென்றாலும் செய்யலாம் எனும் மனோபாவத்துக்குக் காரணம்..., அந்த செயல்களுக்கு உரிய தண்டனை பற்றிய தூரநோக்கு உலக சட்டங்களின் இ.பி.கோ-க்களில் தேட முடியாது.மாறாக, அவற்றை சரியான., உரிய சட்டங்களாக மாற்றினால்தான் உண்டு..!

அதனால்தான், அடிப்படைவாத, வகுப்புசார் பிரிவினரும் தண்டனைகளைக் கடுமையாக்குவது சரியென்கின்றார்கள். பாலியல் பலாத்கார குற்றத்துக்கு மரண தண்டனை அளிப்பதற்கு ஏற்ற வகையில் தற்போதைய சட்டத்தை திருத்துவது பற்றி விவாதிக்க, நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று தில்லி சம்பவத்துக்குப் பிறகு தனது ட்விட்டரில் செய்தி தந்தார் வலதுசாரி வகுப்புவாத கட்சியான பா.ஜ.க.-வின் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான சுஷ்மா சுவராஜ்..! பெண்கள் பர்தா-வை பேண வேண்டும் என்றார் மதுரை ஆதீனம்..!

தன்னை மறைக்க சொல்லும் பர்தா முறையை எதிர்க்கும் பெண்ணியவாதிகளும்கூட, பர்தா-வுக்கு எதிர்ப்பு காட்டவே முடியாது.அதனால்தான் மாதர் சங்கத் தலைவி வாசுகியும் நாங்கள் பர்தாவை எதிர்க்கவில்லை என்று கருத்து தெரிவித்துள்ளார்..!

வல்லுறவுக்கு ஆட்பட்டவர்கள் அனைவரும் ஆடைக்குறைப்பில் வலம் வந்தவர்கள் அல்ல என்று பெண்ணியவாதிகளின் வாதத்தை ஏற்றுக் கொண்டாலும், அதனை மீறிய பிரச்னைகளுக்கு கடுந்தண்டனை அவசியம் என்பதை அவர்களும் ஒப்புக்கொள்கின்றார்கள். பாதிக்கப்பட்ட பெண் ஆடைக்குறைப்பில் இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாக இருக்க முடியாது. ஆனால்,காமக் கொடூரனின் சிந்தனையை வேறுவிதமான வினையூக்கிகள் கிளர்ந்தெழச் செய்திருக்கலாமே..! ஊடகங்களில்கட்டுரையின் மேலே ஒரு நடிகை சொன்னதுபோல் "உணர்ச்சிகளைத் தூண்டனும்" என்கின்ற அந்த செய்முறைப் பாடத்துக்கு எந்த பெண்ணும் இலக்காகலாமே..!

மறுபுறம்,ஆணாதிக்க மனோபவம் மட்டுமே ஆடைக்குறைப்பை மகளிர் வல்லுறவுக்கான காரணமாகக் காட்டினாலும் அதுதான் பிரச்னையின் ஆணிவேர் என்பதையும் மறுக்க முடியாது.

அதேபோல், பாலியல் வல்லுறவு ஏன் நடக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தால் பல தவறுகள் நம்மிடமே இருக்கின்றது. நம் முன்னோர்கள் தாங்கள் பருவ வயதை எட்டியவுடன் திருமணம் செய்து கொண்டார்கள்.அதனால் 12 - 14 வயதிலேயே பெற்றோர் ஆனார்கள்.பாலுறவில் அன்பு சேர்ந்த ஒரு அனுபவம் ஏற்பட்டது.இன்றைய சூழ்நிலை அவ்வாறு இல்லை பெண்ணுக்கு 20 - 25 வயதிலும் ஆணுக்கு 25 - 30 வயதிலும் திருமணம் நடக்கிறது.

மேலும் இன்றைய இளைஞர்களோ நேர காலம் பாராமல் உழைக்கிறார்கள்.அன்றைய காலத்தில் உடல் உளைச்சல் அதிகம் இருந்தது, காரணம் இயந்திரப் பயன்பாடு குறைவு. ஆனால், இன்றைய கால கட்டத்திலோ மன உளைச்சல் அதிகமாக இருக்கின்றது. காரணம் அனைத்தும் இயந்திரமயம். உடலுழைப்பு குறைவு.மேலும் பணம் மற்றும் வேலைக்காக பெற்றோரை விட்டு தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அதற்கு மேல் தொலைகாட்சிகள், திரைப்படங்கள் ஆகியன செக்ஸ் மற்றும் காதலையே மையமாக கொண்டு உள்ளது. தொட்ட இடமெல்லாம் செக்ஸ், நிர்வாண படங்கள், காட்சிகள்!அவன் மனதிற்கு வலு கொடுப்பதோ மது மற்றும் தனிமை.இது ஆண்களுக்கு மட்டும் அல்ல பெண்களுக்கும் பொருந்தும்..!

இனி வாருங்கள்..!

பாதிக்கப்பட்டவர் - பாதிப்படையச் செய்தவர்! இவ்விரு நிலைகளில் பாதுகாப்பு-தண்டனை குறித்து அலசினால் முடிவு கிடைக்கும். காமுகர்களின் இயல்பு நிலை தம்மை பாதிக்காது இருக்க பாதுகாப்பது மங்கையரின் பொறுப்பு.

என் வீட்டை நான் திறந்துதான் வைப்பேன் திருடன் வந்து திருடக்கூடாது என்பது நியாயமான வாதமே..! ஆனால், அறிவுப்பூர்வமான செயல் அல்லவே..!அதேபோல், பூட்டி வைத்திருந்தும் திருடன் இப்படி செய்துட்டானே என்றால், சட்டம் தன் கடமையை செய்ய வேண்டும்.

> **இந்த அழகான உடலை வைச்சுகிட்டு ரசிகர்களோட உணர்ச்சிகளைத் தூண்டனும்.அதுதான் சினிமா தயாரிப்பாளர்கள் எங்ககிட்ட எதிர்பார்க்கிற முதல் தகுதி.அப்புறம்தான் நடிப்புக்கே முக்கியத்துவம்!"**
>
> - 90-களில் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த நடிகை குஷ்பூ அன்றைய பிரபல தமிழ் வாரஇதழ் ஒன்றில் ..!

**தலைநகரின் ஆடம்பரம் இன்று இந்த பாதிப்பை வெளிச்சம் போட்டிருக்கின்றது..!இதே ஒரு குக்கிராம அல்லது வயல்வெளி அல்லது கட்டட வேலை அல்லது வீட்டுப்பணி ரீமாக்களுக்கு நேர்ந்திருந்தால் நாம் வீதிக்கு வந்திருப்போமா என்பதும் புறந்தள்ளிவிட முடியாத நியாயமான வருத்தம்தானே..!**

அந்த கடமை தண்டனையின் வடிவில், மற்ற திருடர்களுக்குப் பாடமாக இருந்தால்தானே.., மற்ற திருடர்கள் உருவாகமாட்டார்கள்..!

திருடர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்ற உரிமையாளரின் வாதம் எத்துணை நியாயமானதோ அதனைவிட சற்றும் குறைந்ததல்ல, வீட்டைப் பூட்டி வைக்க வேண்டும் எனும் நமது பொறுப்புணர்வும்..!

எனவே, பெண் எனும் உன்னத படைப்பை, நாம் மதிக்கின்றோம் எனில் அந்த மதிப்புக்கு மதிப்பு தர அந்த பெண் தன்னை முதலில் மதித்துக் கொள்ள வேண்டும். அதனைத்தான் பர்தா எனும் மதிப்பு தருகின்றது.அதனையும் மீறி செல்லும் காமுகர்களுக்குத் தண்டனை எனும் பயங்கரம் முன்னெடுக்கின்றது.

தலைநகரின் ஆடம்பரம் இன்று இந்த பாதிப்பை வெளிச்சம் போட்டிருக்கின்றது..!இதே ஒரு குக்கிராம அல்லது வயல்வெளி அல்லது கட்டட வேலை அல்லது வீட்டுப்பணி ரீமாக்களுக்கு நேர்ந்திருந்தால் நாம் வீதிக்கு வந்திருப்போமா என்பதும் புறந்தள்ளிவிட முடியாத நியாயமான வருத்தம்தானே..! இந்த சம்பவத்துக்குப் பின்னர் எத்தனை சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றனவே..!அதுமட்டுமல்ல, இந்த சம்பவத்தை காசாக்க திரைப்பட துறையினரும் முயல்வதாக செய்திகள் உலவுகின்றன.

ஆம்..!

எத்தைகைய நிலை என்றாலும், இந்த தேசம் ஒரு முழுமையான மாற்றத்துக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ள,தான் மதிக்கும் பெண்ணினத்தை கண்ணியப்படுத்த, அதற்குரிய சட்டங்களைப் பேண வேண்டிய தருணம் வந்துவிட்டது. அவர்கள் சொல்லும் ஆலோசனைகளும், கேட்கும் தண்டனைகளும் அனைவராலும் நியாயப்படுத்தப்படுகின்றன. ஆனால், அந்தோ..! அதே நலம்பயக்கும் முடிவுகளை இஸ்லாம் 1400 வருடங்களாக வலியுறுத்துவதை மட்டும் அடிப்படைவாதம் என்று சொல்லி அலைக்கழிக்க நினைக்கின்றார்கள்..!

அனைத்துக்கும் மேலாக, தன் சகதோழியை இழந்ததால் வெடித்துக்கிளம்பிய மாணவ அலைகள் வெறும் நுரையாய் அமுங்காமல் ஒரு சில அம்சங்களையும் தம் ஆளுமைக் கடலுக்குள் அமுக்கி அழிக்க வேண்டி உள்ளது.

ஆம், நட்பின் பெயரால் தோழமையை விலை பேசுவதைக் களையுங்கள்!

குடிப்பது பாவம் என்று போய் சமூக அந்தஸ்தாய் மாறிவிட்டதை விட்டொழியுங்கள்..!

மாற்றான் தோட்டத்து மல்லிகையைப் பார்ப்பதே பாவம் என்று போய்.., அது சின்ன வீடாய்., பரிணாம வளர்ச்சி அடைந்து.., நட்சத்திர ஹோட்டல்களில் மனை-மாற்று கலாச்சாரமாய் முன்னேறி.., இன்று லிவிங்-டுகெதர் என்று கவர்ச்சியான பெயரால் புனித உறவு பாழ்படுத்தப்படுவதற்கு எதிராய் குரல் கொடுங்கள்..!

ஒருபால் உறவுக்கு சமூக உரிமை கோரும் காமக் கிறுக்கர்களின் பசிக்கு சாவுமணி அடியுங்கள்.,!

மாணவ- இளைய சமுதாயம், தனது ஒழுக்க,தார்மீக,பண்பாட்டு மற்றும் கண்ணிய செயல்முறைத் தளங்களிலிருந்து உங்கள் பாரதத்தை என்றும் நடைபிறழ அனுமதிக்காதீர்கள்..!

ஆம், இன்றைய கோபக்கார




இந்தியக் குமரியே..! குமாரரே..! இத்தகைய பாரத்தின் பாரம்பர்யம் காக்க உங்கள் கோபத்தை ஆக்கபூர்வ முறையில் செயலாற்றச் செய்யுங்கள்..! அந்த நேர்ப்பாதைக்குள் உங்கள் மனத்தையும் அறிவையும் உடைமையாக்குங்கள்..!

இன்னொரு அம்சமும் இங்கு வெளிச்சம் போடுகின்றது. அலைகடலென அமெரிக்கர்கள் இஸ்லாத்தின்பால் திரும்புவதற்கு அவர்கள் வார்த்தைகளில் சொன்னால் வளர்ந்து வரும் இஸ்லாமோ.ஃ.போபியா-வும் காரணமாக இருப்பதுபோல், தில்லி சம்பவம் முன்னெடுத்து சென்றிருக்கும் பாதை உண்மையான இஸ்லாத்தை நோக்கி இளைய சமூகத்தை இட்டுச் செல்லட்டும்.

வக்கிர சருகுகளை வெருண்டோடச் செய்ய இன்றைய பூக்கள் புயலாய் வெகுண்டெழுகின்றன. பெண்மையை போகமாக்கி கசக்கி எரியும் கயமைகள் கட்டோடு பொசுங்க, இந்த இளைய தலைமுறை நெருப்புக் குண்டங்களாய் மாறி நிற்கின்றன

கோபக்கார குமரியாய் வெகுண்டெழுந்த நம் இந்திய சகோதரிகள் தங்கள் கோபங்களின் நியாயத்துக்கு சரியான புகலிடம் கிடைக்க இஸ்லாத்தின் இந்த உன்னத கொள்கைக்கு சாரை சாரையாய் செவி சாய்ப்பார்கள் என நம்புவோம்.!அதற்கு இறையருள் என்றும் துணை நிற்கட்டும்.

# "வெகுஜன ஊடகத்தில் முஸ்லிம்கள் உள்ளனர்..!"

கடந்த இதழில்..! **ஊடகத்துறையில், இஸ்லாமிய மாற்று ஊடகத்துறை குறித்து தங்களின் கருத்து என்ன..? எனும் வினாவுக்கான பதில் இந்த இதழிலும்..!**

ஆசிரியருடனான பேராசிரியரின் பேட்டி தொடர்கின்றது..!

**நமது முஸ்லிம் சகோதரர்கள் பலர் வெகுஜன ஊடகப் பொறுப்புக்களில் வந்திருக்கின்றார்கள்.தமிழ்த் தொலைக்காட்சி சேனல்களின் முக்கிய இடங்களில் பல முஸ்லிம் சகோதரர்கள் இருக்கின்றார்கள்.**



இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி,சீரமைத்து ஒரு குறிக்கோளுடன் இணையதளத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்! உதாரணமாக குவைத்தைத் தலைமையகமாகக் கொண்ட NAF எனும் அமைப்பை தொழில்நுட்ப ஊடகத்தைப் சரியான வகையில் பல தளங்களில் பயன்படுத்தும் விதத்தை இளைஞர்களுக்கு பயிற்றுவித்துத் தருகின்றது.இதேமாதிரி இன்னும் புதுமையாக அதாவது Innovative-ஆக நாம் ஊடகத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.எடுத்துக்காட்டாக முஸ்லிம்களுக்கென்று ஒரு தொலைக்காட்சி சேனல் ஒன்றைப் பிரத்யேகமாக தொடங்குவது சாத்தியமா என்றால், அத்துறையுடன் தொடர்புடையவன் எனும் நிலையில் சாத்தியமில்லை என்றே கூறுவேன்.

- அதற்குக் காரணம் என்ன..?

முஸ்லிம் மீடியா என்றால், நாம் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டே நாம் இயங்க வேண்டும். அந்த வரையறையுடன் நாம் விளம்பரங்களைப் பிடித்து அந்த சேனல் நடக்க வகை செய்ய வேண்டும்.அது இயலாதபட்சத்தில் நாம் தலையில் கை வைத்து உட்காரத் தேவை இல்லை.இணையதளத்தின் மூலமாக, இணையதளத் தொலைக்காட்சி ஒன்றைத் தொடங்கலாம்.இதில் தொடர் பற்றிய பிரச்னைகள் வரப்போவது இல்லை..!முஸ்லிம்கள்-முஸ்லிமல்லாதார் ஆகியோரைக் கருத்தில் கொண்டு இணையதளத் தொலைக்காட்சி நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்லலாம்..! இது ஒரு பக்கம்..!

- ஊடகத்துறை தொடர்புடைய நீங்கள் இதில் என்ன ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள்..?

நான் சார்ந்த தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் இந்த வகையில் செயற்பட சிந்தித்து வருகின்றது.

- நல்ல செய்தி..!

இன்னும் நமது முஸ்லிம் சகோதரர்கள் பலர் வெகுஜன ஊடகப் பொறுப்புக்களில் வந்திருக்கின்றார்கள்.தமிழ்த் தொலைக்காட்சி சேனல்களின் முக்கிய இடங்களில் பல முஸ்லிம் சகோதரர்கள் இருக்கின்றார்கள்.

அதேபோன்று அச்சு ஊடகத்திலும் இருக்கின்றார்கள்.இது ஒரு ஆக்கபூர்வ வளர்ச்சி.அடுத்து முஸ்லிம்களுக்கென்று ஒரு நாளிதழ் இல்லாதது ஒரு பெரிய குறைதான்.ஆனால்...,

நமது பேட்டிப் பயணமும் தொடரும் இறைநாடின்..!

# "இன்று நம்மிடையே ஒருமைப்பாடு அவசியம்..!"

**ஹலால் உணவு குறித்த விழிப்பு உணர்வு தளத்தில் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிங்கப்பூரைச் சேர்ந்த முஹம்மத் ஜின்னா அவர்கள் குவைத் வருகை யின்போது வசந்தம் ஆசிரியருக்கு அளித்த பேட்டி..!**

**அறிவியல் சான்றுகள், மார்க்க அறிஞர்களின் திருக் குர்ஆன்-நபிவழி சட்டம் இவை இரண்டும் ஒரு திசையிலிருந்து இணைந்து செயற்படும்போதுதான் ஹலால் உணவு குறித்த முழு பரிணாமமும் வெளிப்படும்.**

● கணினிப் பொறியாளரான தங்களை இந்த ஹலால் எனும் வாழ்வியலின் மற்றும் சர்வதேச பொருள்திறன் கொண்ட ஒரு அத்தியாவசியத் துறைக்கு தங்களை ஈர்த்தது எது..?

அடிப்படையில் கணினிப் பொறியாளரான நான் சிங்கப்பூரில் நண்பர் ஒருவருடன் ஹலால் உணவு தொடர்பான கருத்தரங்கம் ஒன்றுக்கு சென்றிருந்தேன்.அதனை நடத்தியவர் வழங்கிய அம்சங்களில் மேலும் சில மாறுதல்கள் மற்றும் சேர்த்தல்கள்-நீத்தல்கள் செய்திருக்கலாமோ என எனக்கு தோன்றியது.நிகழ்ச்சி முடிந்ததும் அதனை அவரிடம் தெரிவித்தேன்.அதனை ஆழ்ந்து கவனித்த அவர் அதில் பலவற்றை சரியெனப் பாராட்டினார்.அன்றிலிருந்து நான் ஆரம்பித்த பயணம் இன்று பல்வேறு நாடுகளில் 'ஹலால்'- ஆகுமான உணவு பற்றிய விழிப்பு உணர்வுகள் ஏற்படுத்தும் பணியை செய்வதல் தொடர்கின்றது. புகழனைத்தும் இறைவனுக்கே..!

● சரி..! ஹலால் என்பது ஒரு பரந்து விரிந்த.., அதிமுக்கியமான பொருள் கொண்ட.., அதிதேவையான.., அதுவும் பரபரப்பான இந்த எந்தில உலகின் அத்தியாவசியமான அம்சம்.மார்க்க ரீதியாக முஸ்லிம்களுக்கும், குறைந்தபட்சம் உடல்நல ரீதியாக முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் தேவையான ஒன்று என நினைக்கின்றேன்.இதனை எப்படி காண்கின்றீர்கள்..?

முஸ்லிம்களைப் பொறுத்தவரை, மதரஸாக்களில் பயின்று வரும் மார்க்க அறிஞர்கள் இஸ்லாமிய சட்ட வரைமுறை-ஷரீஅத் அம்சங்களில் சிறந்து விளங்குகின்றார்கள்.ஆனால்,உணவுப் பொருட்களுடன் சார்ந்த தொழில்நுட்ப அம்சங்களில் அவர்களுக்கு போதிய அறிவு இருப்பதில்லை என்பது உண்மை.காரணம், நாள்தோறும் மாறி வரும்,வளர்ந்துவரும் தொழில்நுட்பம்..!

நமது நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் உணவு உற்பத்தி உள்நாட்டு தயாரிப்பு-Production எனும் நிலையில் இருந்து வந்தது. ஆனால், உலகமயமாக்கலின் தாக்கத்தால், இது பெரும்பாலும் செயல்முறை அல்லது பதமுறை எனப்படும் Processing நிலையை எட்டியிருக்கின்றது. திருக் குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் இந்த ஹலால் உணவுமுறை குறித்துப் பயில்கின்றனர் மார்க்க அறிஞர்கள்.ஆனால், இன்று இந்த உணவு உற்பத்தி என்பது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சார்பாக வேறு திசையிலிருந்து வருகின்றது. எனவே, இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து இறைசட்டங்களின் அடிப்படையில் சரியான பாதையில் பயணிக்க வேண்டிய கட்டாயத்துக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.எனவே, ஆய்வகங்களிலிருந்து வெளிவரும் அறிவியல் சான்றுகள், மார்க்க அறிஞர்களின் திருக் குர்ஆன்-நபிவழி சட்டம் இவை இரண்டும் ஒரு திசையிலிருந்து இணைந்து செயற்படும்போதுதான் ஹலால் உணவு குறித்த முழு பரிணாமமும் வெளிப்படும். உதாரணமாக..., நமது பேட்டிப் பயணமும் தொடரும் இறைநாடின்..!



# "ஹலால் -ஆகுமான உணவே உன்னத உணவு..!"

அப்துல்லாஹ்





























முஸ்லிமல்லாத மேலை நாடுகளில்கூட குறைந்தபட்சம் உடல் மற்றும் சமூக நலன் கருதி ஹலால் - ஆகுமான உணவு-முறையை ஏற்றுக்கொண்டாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்" -இஸ்லாமிய நிலையம்-IPC தமிழ்ப் பிரிவு சார்பாக குவைத் மஸ்ஜித் அல்-கபீர் அரங்கில் நடைபெற்ற ஹலால் விழிப்பு உணர்வு கருத்ததரங்கில் கூறினார், ஹலால் பேரவை - Halal Forum தலைவர் முஹம்மத் ஜின்னா அவர்கள்..!

உலக அளவில் ஹலால் உணவு குறித்த விழிப்பு உணர்வு ஏற்படுத்தும் முயற்சியின் ஒருமுகமாக குவைத்தில் அண்மையில், ஹலால் விழிப்பு உணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இஸ்லாமிய நிலையம் - IPC தலைமையக அழைப்புப்பணித் துறை தலைவர் அஷ்ஷெக் ஃபவாஸ் அல்-துவைஜ் அவர்கள் தலைமை வகித்தார்.

சகோ. ஷம்ஷுதீன் (எ) ஜேம்ஸ் அவர்களின் திருக் குர்ஆன் ஓதுதலுடன் நிகழ்ச்சி ஆரம்பித்தது.

IPC,தமிழ்ப் பிரிவு பொறுப்பாளரும்,வசந்தம் இதழ் ஆசிரியருமான சகோ.மு.அ.அப்துல் முஸவ்விர் அறிமுக துவக்கவுரை ஆற்றினார்.

கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்ட,ஹலால் பேரவை - Halal Forum தலைவர் முஹம்மத் ஜின்னா, சிங்கப்பூர் அவர்களின் காணொளிக் காட்சி நடைபெற்றது.ஆகுமான பொருள்களின் அவசியம்,கண்டறிதல் மற்றும் நடைமுறை சாத்தியங்கள் குறித்து விளக்கிப் பேசினார்.

நிகழ்ச்சியின் இடையே நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான கூனிமேடு மக்கள் நலச்சங்கம் தனது பணிகள் குறித்து எடுத்துரைத்தது. அதன் சார்பாக சகோ. நவ்ஷாத் அவர்கள் பேசினார்.

அதேபோல் மற்றொரு ஒருங்கிணைப்பாளரான NAF-Net Achievers Forum அமைப்பு சார்பாக பள்ளிப் பாசறைத் திட்டம் எனும் SMART Masjid குறித்த திட்ட வரைவு முன்வைக்கப்பட்டது.அதன் சார்பாக,சகோ.இக்ராம் தவ்ஃபீக் அவர்கள் காணொளிக் காட்சி வழங்கினார்.

சிறப்பு விருந்தினருக்கு நினைவுப் பரிசு வழங்கிக் கவுரவித்தார் இஸ்லாமிய நிலையம்-IPC தலைமையக அழைப்புப்பணித் துறை தலைவர் அஷ்ஷெக் ஃபவாஸ் அல்-துவைஜ் அவர்கள்..!

சகோ.அமானுல்லாஹ் கான் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே முடிவடைந்தது.

கருத்தரங்கில் ஏராளமான முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத ஆடவர்-மகளிர் கலந்துகொண்டனர். புகழனைத்தும் இறைவனுக்கே..!

இடப்பக்கம்: கடிகாரச் சுற்றிலிருந்து:-IPC,தமிழ்ப் பிரிவு பொறுப்பாளரும்,வசந்தம் இதழ் ஆசிரியருமான சகோ.மு.அ.அப்துல் முஸவ்விர்-சகோ. ஷம்ஷுதீன் (எ) ஜேம்ஸ்-பார்வையாளர்கள் ஆடவர்-மகளிர்-சகோ.இக்ராம் தவ்ஃபீக்-இஸ்லாமிய நிலையம் - IPC தலைமையக அழைப்புப்பணித் துறை தலைவர் அஷ்ஷெக் ஃபவாஸ் அல்-துவைஜ்-

மேலே: மேலிருந்து கீழ்:-Halal Forum தலைவர் முஹம்மத் ஜின்னா,சிங்கப்பூர் -சகோ.அமானுல்லாஹ் கான்-சகோ. நவ்ஷாத்

....ஆசிரியரிடமிருந்து (3-ஆம் பக்க) தொடர்ச்சி..!

பருவப்பெண்ணை இந்த நிலைக்கு ஆளாக்கிவிடும் வகையில் அவளைக் கவனிக்காதுவிட்ட சமூகம் குற்றவாளியா?

தனது குடும்பத்துக்காகவோ அல்லது சுய சம்பாத்தியத்துக்காகவோ இந்த நிலைக்கு ஆளாகிவிட்ட சுயம் அந்த ரிஸானாவே குற்றவாளியா?

யார் குற்றவாளி??

தீர்ப்பு இறைமன்றத்தில் தீர்வாகும் வரை இன்று நாம் ஸவூதி சட்டங்களையோ அல்லது மன்னிக்காத அந்த குடும்பம் பற்றியோ அல்லது சுயம் ரிஸானாவையோ குற்றஞ்சாட்டி பயனில்லை.

ரிஸானாவின் விஷயத்துக்கு வருவோம்! சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு உண்மையில் ரிஸானா குற்றவாளி இல்லை என இருந்தால், அவளுக்குரிய சுவனப்பரிசை இறைவன்தான் நிர்ணயிக்க முடியும்.அது மறுமையில்தான் தீர்ப்பாகும்.

குறிப்பாக ஸவூதி மற்றும் இஸலாமிய சட்டங்களைக் குறை கூறுவோர் சற்று சிந்திக்கட்டும்..!

ரிஸானாவைப் பலியிட வேண்டும் என்பது மட்டும் அவர்களின் நோக்கமாக இருப்பின், அவளைக் காப்பாற்ற சம்பந்தப்பட்ட குடும்பத்தாரிடம் மன்னிப்புக்காக தனிப்பட்ட முறையில் கோரிக்கை வைத்திருப்பார்களா..? 3 மில்லியன் ரியால்களும்,உடல்நலன் பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்தின் இன்னொரு குழந்தைக்கு வெளிநாட்டு சிகிச்சை செலவை ஏற்றுக்கொள்ள உதவுவதாக தனிப்பட்ட ரீதியில் தனவான்கள் சொல்லியிருப்பார்களா..?

ஸவூதி மன்னர் ஒரு கோரிக்கையாக ஈட்டுத்தொகை பெற்று, மன்னிக்குமாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தை கேட்டுக்கொண்டதும் இது திருட்டுக் குற்றம் அல்ல என்பதால்தான்..! தீர்ப்பை மாற்ற அவருக்கும் உரிமை இல்லை. ஏனென்றால், பாதிக்கப்பட்ட குடும்பம்தான் இறைவன் தந்த சட்டத்துக்குட்பட்டு மன்னிக்க தகுதியானவர்களே அன்றி ஆட்சியாளர்கள் அல்லர்.

மேலும்,தன்னிடம் திருட்டு விஷயத்தில் பரிந்துரைக்கு வந்த உயர்குலத்தாரிடம் அதுவும் தனது குறைஷ் குல மக்களிடம் "எனது மகள் ஃபாத்திமாவேகூட திருடியிருந்தால் அவள் கையை வெட்டுவேன்" என்ற தானைத் தலைவனின் ஆளுமையில் பயின்ற மக்கள் நாம்..!

அதேபோல் பல்வேறு உயிர் தொடர்பற்ற அம்சங்களிலேகூட சாட்சிகளின் பலம், ஆதாரங்களின் வலு இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு இஸ்லாமிய சட்டம் மிக நுட்பமாக நடைமுறைப்படுத்தப்படும்போது, ரிஸானாவின் வழக்கு போன்ற உயிர் தொடர்பான விஷயங்கள் எனில், எத்துணை ஆழமாக நுட்பமாக வழக்கை நடத்தியிருப்பார்கள் என்பதை நாம் உணர வேண்டாமா..?

ஸவூதியை முன்வைத்து இஸ்லாமியக் குற்றவியல் சட்டங்களைக் குறை கூறுவோர், மற்றொன்றையும் இங்குக் கவனிக்க வேண்டும், இஸ்லாமிய அனுமதி வரையறைகளுக்குட்பட்டு தன்னால் இயன்ற வரை ஸவூதி அரேபியா ரிஸானாவைக் காப்பாற்ற முயன்றது.இதனை எவரும் மறுக்க முடியாது.அதனால்தான் 2007-இல் முடிவான பின்னரும் இத்தனை நாட்கள் வரை மன்னிப்பின் வாய்ப்புக்கு அவகாசம் ஏற்படுத்தித் தந்திருந்தது.

ஆனால், அனைத்துக்கும் மேலாக, இறைசட்டங்களின் அடிப்படையில் முடிவான ஒரு தீர்ப்பை மன்னிப்பால் மாற்ற பாதிக்கப்பட்ட குடும்பத்துக்குத்தான் உரிமை உண்டே தவிர நாட்டு மன்னர்கூட ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் ஸவூதி நிருபித்திருக்கின்றது.நமது நாடுகளில் நடப்பதுபோல், கருணை மனுவை ஜனாதிபதிகளுக்கு அனுப்பி இறைசட்டத்தை கேலிக்கூத்தாக்கும் அம்சம் இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தில் கடைப்பிடிக்க முடியாது..!

இந்த விஷயத்தில் ஒரே ஒரு சாரார் அதாவது, பழிக்குப் பழி எனும் உரிமையை இஸ்லாம் கொடுத்திருப்பதைப் பயன்படுத்திக் கொண்ட பாதிக்கப்பட்ட ஸவூதி உதைபி குடும்பத்தார்,அதனைவிட சிறந்த மன்னிப்பின் மகிமையைப் பயன்படுத்திக் கொண்டிருந்தால்,உலகத்தார் முன்னிலையிலும், மறுமையில் இறைசந்நிதானத்திலும் ஒரு உன்னத மதிப்பை எய்தியிருப்பர்.அந்த மகத்துவமிக்க வாய்ப்பை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்..!

ஆம்..!கருப்பு பர்தாவில் விழிகள் மட்டும் தெரிய தூக்குமேடைக்கு நடைபயின்ற கடைசி வரை "என்னய

**இஸ்லாமிய அனுமதி வரையறைகளுக்குட்பட்டு தன்னால் இயன்ற வரை ஸவூதி அரேபியா ரிஸானாவைக் காப்பாற்ற முயன்றது.இதனை எவரும் மறுக்க முடியாது.**



எப்படியாவது நாட்டுக்குக் கூட்டிட்டுப் போங்கம்மா" என்று ஏங்கிக் கொண்டிருந்த அந்த பருவப் பெண் குற்றவாளி இல்லை என்றால்,இறைநீதிமன்றத்தில் தனக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதிக்காக பரிகாரமாய் இறைகொடையை வெல்வாள்.

அதுவரை யார் குற்றவாளிகள் என் பரஸ்பர குற்றச்சாட்டுக்களில் வீழ்ந்திடாமல்,இனி இதுபோன்ற ரிஸ ானாக்களின் நிலைக்கு எந்தவொரு மனிதரும் காரணமாகி நிற்கக்கூடாது எனும் வகையில் தனிமனிதர் ஒவ்வொருவரும் பொதுநல நோக்கோடு சமூக தொலைநோக்கோடு செயற்படவேண்டும்.

நம்மால் இப்போது செய்ய முடிவது எல்லாம்.., அவள் குற்றவாளி இல்லையெனில் அவளுககு இழைக்கப்பட்ட அநீதிக்காக இறைவா, மறுமையில் அவளுக்கு உன்னத நீதியை வழங்குவாயாக..! என்றுதான் பிரார்த்திக்க முடியும்.உலகியல் ரீதியாக அவளது வருமானத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் அவள் குடும்பத்தாருக்கு இயன்ற உதவிகளை ஆற்றிட வேண்டும்.அதற்கும் மேலாக, அந்தந்த நாட்டு சட்ட ரீதியாக,பருவப் பெண்கள் பிழைப்புக்கு வழி தேடிச் செல்லும் வகையில் சட்டங்கள் முறைப்படுத்தப்படுவதில் கடும் நடவடிக்கைகள் பேணப்பட வேண்டும்.


இதயங்களின் இரகசியங்கள் அறிந்த நாயனே..! அந்த இளம்பெண்ணின் பிழைகளைப் பொறுத்து சுவனத்தில் நுழைவிப்பாயாக..!!அவளை இழந்து வாடும் இந்த ஏழை அபலைக் குடும்பத்தாருக்கு அழகிய பொறுமையை வழங்குவாயாக..!!!



முு.அ.அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musavir2010@yahoo.com | maam2k@gmail.com
http://www.facebook.com/vasanthammonthly
https://twitter.com/Vasantham2k
ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்

# இறை அற்புதத்தின் இனிய நாதம்..!



இளவேனில்

கருவியல் ஆராய்ச்சியாளரான இராபர்ட் கில்ஹாம் ஒரு யூதர். இவர் அண்மையில் இஸ்லாத்தைத் தழுவினார். இவரது மனமாற்றத்திற்கு வழி செய்தது திருக்குர்ஆனின் ஒரு வசனம்...! அந்த வசனம் இதுதான்-

*தலாக்-விவாக விலக்கு சொல்லப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய்கள் ஆகும்வரை தாமாகவே பொறுத்திருக்க வேண்டும். தங்களுடைய கருவறைகளில் அல்லாஹ் எதையேனும் படைத்திருப்பானேயானால் அதை மறைப்பது அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல! அல்லாஹ்வின் மீதும், இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் அவர்கள் நம்பிக்கை கொண்டவராக இருந்தால் ஒருபோதும் அவர்கள் இவ்வாறு செய்யக்கூடாது! அவர்களின் கணவர்கள் (முன்னிருந்த) உறவைச் சரிப்படுத்திக்கொள்ள விரும்பினால், இத்தவணைக்குள் அவர்களை மீண்டும் மனைவியாக்கிக் கொள்ள அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது.*

அதாவது, விவாக விலக்கு செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாதம் காத்திருந்த பின்பே -அதாவது மூன்று மாதவிடாய் பருவங்களில் 'இத்தா' இருந்த பின்பே மறுமணம் செய்ய வேண்டும்

இந்த வசனத்தைப் படித்தபோதுதான் இராபர்ட் மனம் மாறினார்.

இராபர்ட் நீண்ட காலமாக டி.என்.ஏ. எனும் மரபணு ஆய்வை மேற்கொண்டிருந்தார். கைவிரல் ரேகைப் பதிவு ஒரு மனிதனை அடையாளம் காட்டுவதைப் போன்றே, டி.என்.ஏ. ரேகைப் பதிவு தம்பதியரை அடையாளம் காட்டிவிடும். 'ஒரு பெண்ணில் பதிவாகியுள்ள ஆணின் டி.என்.ஏ. ரேகைப் பதிவு மூன்று மாதங்களுக்குப் பிறகே அழியும்' என்பது இராபர்ட்டின் ஆய்வு முடிவு. அதையே திருக் குர்ஆனின் இவ்வசனம் கூறுகிறது என்பதைக் கண்ட யூத விஞ்ஞானி ஆடிப்போனார் திருக் குர்ஆனை ஏற்றார்.

இது தொடர்பாக எகிப்தைச் சேர்ந்த டாக்டர் அப்துல் பாசித் முஹம்மத் சையித் கூறுகிறார்: அறிவியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே இராபர்ட் கில்ஹாம் இஸ்லாத்தில் இணைந்துள்ளார். தம்பதியர் உடலுறவு கொண்டால் ஆண் தனது பாலின ரேகையைப் பெண்ணிடம் விட்டுச்செல்கிறான். அந்த ரேகை மூன்று மாதங்களுக்குப் பிறகே முற்றாக அழியும் என்று இராபர்ட் கண்டுபிடித்தார்.

அதற்கேற்ப அமெரிக்காவில் ஆப்பிரிக்க முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரு பகுதியில் கள ஆய்வில் இறங்கினார் அவர்..!அப்பகுதியில் வாழும் முஸ்லிம் பெண்களிடம் அவர்களின் கணவர்களது ரேகை மட்டுமே பதிவாகியிருந்தது. அதே நேரத்தில் அமெரிக்கப் பெண்கள் வாழும் ஒரு தெருவில் ஆய்வை மேற்கொண்டபோது அப்பெண்களிடம் பல்வேறு ரேகைகள் காணப்பட்டன. மூன்று வெவ்வேறு ரேகைகள் அவர்களில் பதிவாகியிருந்தன.


இராபர்ட் கில்ஹாம் அதிரடியாக ஒரு காரியம் செய்தார். அவர் தம் மனைவியை மருத்துவப் பரிசோதனைக்கு ஈடுபடுத்தினார். அவளிடம் மூன்று ரேகைப் பதிவுகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அத்துடன் தம்முடைய மூன்று மகன்களில் ஒருவன் மட்டுமே தமக்குப் பிறந்தவன் என்பதையும் கண்டறிந்தார்.

இதிலிருந்து மூன்று மாத 'இத்தா' ஏன் கடமையாக்கப்பட்டது என்பதற்கான காரண விளக்கமும் கிடைக்கிறது. முந்தைய கணவனின் டி.என்.ஏ. - மரபணு ரேகைப் பதிவு முற்றாக அழிய மூன்று மாதங்கள் பிடிக்கும். அதன்பின் அவள் மறுமணம் செய்துகொண்டால், டி.என்.ஏ. பரிசோதனையில் குழப்பம் இராது. இல்லையேல் மறுமணம் செய்தபின் பிறக்கும் குழந்தையின் டி.என்.ஏ.வும் முந்தைய கணவனின் டி.என்.ஏ.வும் ஒத்துப்போக இடமுண்டு. குழந்தை யாருடையது என்ற குழப்பம் வெடிக்கும்.

பாருங்கள்..!இறைவிதிமுறைகளின் பின்னால் ஒளிந்திருக்கும் மானுடநலன் இரகசியங்களின் தாத்பர்ய உன்னதத்தை..! உணருங்கள் இறைவல்லமையித் தூக்கிப் பிடிக்கும் தூய இஸ்லாத்தை..!

முந்தைய கணவனின் டி.என்.ஏ. - மரபணு ரேகைப் பதிவு முற்றாக அழிய மூன்று மாதங்கள் பிடிக்கும். அதன்பின் அவள் மறுமணம் செய்துகொண்டால், டி.என்.ஏ. பரிசோதனையில் குழப்பம் இராது. இல்லையேல் மறுமணம் செய்தபின் பிறக்கும் குழந்தையின் டி.என்.ஏ.வும் முந்தைய கணவனின் டி.என்.ஏ.வும் ஒத்துப்போக இடமுண்டு. குழந்தை யாருடையது என்ற குழப்பம் வெடிக்கும்.

# பலாத்கார தண்டனை குறித்து பிரபலங்கள்..!




## பலாத்காரத்தில் ஈடுபடுவோர் மீதான தண்டனை குறித்து பிரபலங்களின் கருத்துக்கள்...!

மர்வான்



**டாக்டர் ஜெ.ஜெயலலிதா**

*தமிழக முதல்வர்*

பாலியல் வன்முறைக் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு «வேதியியல் முறையில் ஆண்மை நீக்கம்,, செய்யப்படுவது பாலியல் வன் கொடுமைகளில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சமாக மரண தண்டனை அளிப்பது ஆகியவை குறித்து சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்படும்..!



**அருணகிரிநாதர்**

*மதுரை ஆதீனம்*

இஸ்லாமியப் பெண்கள் எப்படி பர்தா அணிகி றார்களோ அதேபோல தமிழ்நாட்டுப் பெண்களும், ஒட்டுமொத்த இந்தியப் பெண்களும் பர்தா அணிய வேண்டும். இதன் மூலம் ஆண்களின் வக்கிரப் பார்வையிலிருந்து பெண்கள் தப்ப முடியும்..!



**அருந்ததி ராய்**

*பத்திரிகையாளர்*

கற்பழிப்பு எங்கு நடந்தாலும் அவை கண்டிக்கப்பட வேண்டியவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் எல்லா விஷ யங்களையும் போன்று இந்த விஷயத்திலும் நம் நாட்டில் பாரபட்சம் காட்டப்படுகிறது. குஜராத்தில் பலநூறு முஸ்லிம் பெண்களின் கற்புகள் காவிக் கொடூரர்களால் சூறையாடப் பட்டப்போது இந்த ஊடகங்கள் ஏன் அமைதி காத்தன?



**கே.சண்முகம்**

*சிங்கப்பூர் சட்ட அமைச்சர்*

டெல்லியில் இளம் மாணவி மிகவும் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருப்பதும், அதனால் அவர் மரணமடைந் திருப்பதும், மரண தண்டனை போன்ற கடுமையான ஒரு தண்டனை அவசியம்தான் என்பதை நினைவூட்டுகிறது..!

# "உம்மா நான் ஸவூதிக்குப் போறேன்..!"

அஸ்வின்

(சமீபத்தில் ஸவூதி அரேபியா நாட்டில் மரண தண்டனைக்குள்ளான இலங்கைப் பணிப்பெண் சகோதரி ரிஸானா ந:ஃபீக் மற்றும் அவர் போன்ற பணிப்பெண்களுக்கு இந்த கவிதை சமர்ப்பணம். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களில் குறிப்பாக தென்கிழக்கு முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் இக்கவிதை அமைத்துள்ளோம்)

உம்மாநான் ஸவூதிக்கு போறேன்-எங்கட
கவலைகள் கரச்சல்கள் கலஞ்சோடிப்போக...!
உம்மென்று இருக்காதே நீயும்-என்ட
உசுரப்போல் எப்போதும் புள்ளநான் பாப்பேன்..!!

வாப்பாநீங்க ஒழச்சது போதும்-ஒங்கட
பெரச்சின லாத்தையும் நானினி பாப்பேன்...!
சாப்பாட்டுக் கினியென்ன பஞ்சம்...?-ஒங்கள
மௌத்தாகும் வரைக்கும்நான் மனசாற பாப்பேன்..!!

கலியாண வயசுள்ள என்ன-நீங்க
கரசேக்க படுகிற பாட்ட நான் அறிவேன்...!
என்னகா செய்றநான் உம்மா
பொம்புளயா பொறந்தது யாரோட குத்தம்..?

அப்பம் வித்து காக்கா படிச்சார்
கடசியில் நமக்கெல்லாம் என்னத்த கிழிச்சார்...?
கொமர நெற வேத்த முந்தி-காக்கா
கொறுக்காட பேத்திய கலியாணம் முடிச்சார்...?

புழிஞ்ச தேங்காப் பூவப் போல
புளிச்சித்தான் போனோம் அவருக்கும் நாங்க-என்ட
கிழிஞ்ச ஃசல்வார,, மாத்த-உம்மா
ஒங்கிட்ட காசில்ல யார்ட்ட வாங்க...?

படிச்சாக்கள் இப்பெல்லாம் கூட-இஞ்ச
படிப்புத்தான் உசிரென்றோர் சோத்துக்கு வாட-நான்
பட்டங்கள் படிச்சதும் வீந்தான்-இப்ப
தொழிலின்றி இருந்திட்டா கெடைக்குமோ தீன்தான்...?

அரசாங்க தொழிலையும் காணோம்-நாங்க
அலையாலும் மழையாலும் அழிஞ்சிதான் போனோம்
ஃஎம்பி,,மார் பொய்கள கேட்டா - உம்மா
இதவிட மோசமா அழிஞ்சுதான் போவோம்...!



ஒழைக்காட்டி ஒசந்தவர் யாரு? -நாங்க
ஒழைக்காம தின்டிட்டா மதிக்குமா ஊரு..?
ஒழச்சத்தான் கக்கிஷம் போகும்-இத
ஒணராட்டி எப்புடி சோகங்கள் சாகும்...?

நெனச்சமாரி நாங்க உடுக்க-இழிவா
நெனச்ச மச்சானுக்கு சீதனம் குடுக்க..!
ஸவூதிக்கு உம்மாநான் போறேன்-எல்லாம்
சரியாக வந்திடும் சிலநாளில் பாரேன்...!!

சொளையாக அனுப்புறன் காசி- ஊட்டில்
சொகமாநீ வாழலாம் பூட்டும்மா ஃஏசி,...!
தொணையாக இருக்கிறேன் உம்மா-நீயும்
கொளராத கக்கிஷம் போய்விடும் சும்மா...!!

சொர்க்கத்த வாங்கிட்டு வருவேன்-அந்த
மக்கத்து சொகமெல்லாம் ஒனக்குத்தான் தருவேன்
சொத்துக்கள் உம்மாநீ வாங்கு-எங்கட
சொர்க்கத்தில் இனியாச்சும் சொகமாக தூங்கு...!

மனம்வெச்சி என்னநீ அனுப்பு-ஸவூதி
நானிப்ப போனாத்தான் எரியும்நம் அடுப்பு..!
போஎன்டு செல்லித்தான் பாரு..-சொட்டு
நாளைக்குள் ஓடும்மா தங்கத்தில் ஆறு..!!

ஓயித்தாட புள்ளநான் என்று
ஒதுக்கித்தான் பாக்காக ஊராக்கள் இன்று..!
அவியலின் முன்னால நாங்க
ஆரேண்டு காட்டித்தான் வாழனும் ஓங்க...!!

உம்மாநான் ஸவூதிக்கு போறேன்-எங்கட
கக்கிஷம் எல்லாமே காத்துல போகும்-என்ன
சும்மா நெனைக்காதே நீயும்-நாங்க
சொகுசாக வாழலாம் சொமையெல்லாம் தீயும்...!!

## யூஸுஃபும் சகோதரர்களும்..!

எல்மா ரூத் ஹார்டர்
தமிழில் மழலைப்ரியன்

11

# அரண்மனையில்..!

யூஸுஃபிற்கு தம் கனவின் பொருள் சொன்னதற்கு அரசர் நன்றி கூறினார். "நீங்கள் நேர்மையானவர் என்பதை நாங்கள் உணர்ந்துவிட்டோம். இனி நீங்கள் இந்த அரசில் முக்கிய பொறுப்பு வகிப்பீர்கள்" என்றார் அரசர்.

தானியக் கருவூலங்களின் பொறுப்பை எனக்குத் தாருங்கள்.பயிர்களின் அறுவடையை மேற்பார்வையிடும் பணியையும் என்னிடம் ஒப்படையுங்கள்.தானியங்களை வீணாக்காமல் சேமிக்கவும், அந்தச் சேமிப்பை கண்காணிக்வும் இவை உதவும்" என்றார் யூஸுஃப்.

யூஸுஃப் அரசவையில் ஒரு முக்கியமான மனிதர் ஆனார்.அடுத்து வர இருக்கும் ஏழு வருடங்கள் பஞ்சகாலம் ஆதலால், அதனைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்தார்.பசி-பட்டினியால் மக்கள் வாடக்கூடாது என கவனமாக இருந்தார். அதற்காக அவர் கடுமையாக உழைத்து, எகிப்து மக்களுக்கு உதவினார்.

ஆனால், எல்லா நேரமும் அவர் வெகு தூரத்தில் உள்ள தம் வீட்டைப் பற்றியும்,தம் குடும்பத்தாரைப் பற்றியும், குறிப்பாக தம் தந்தையைப் பற்றியும் எண்ணியபடி இருந்தார்.பாசத்திற்குரிய தந்தையையும்,நேசத்திற்குரிய தம்பியையும் காண அவர் ஏங்கினார்.

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

## திருக் குர்ஆன்

அத்தியாயம் 105

**அல் ஃபீல்**

மக்காவில் அருளப்பட்டது

வசனங்கள்:5

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ١

اَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِاَصْحٰبِ الْفِيْلِ ۞١

105:1 அலம்தர கைஃப ஃபஅல ரப்பு(bbu)க பி(bi) அஸ்ஹாபி(bi)ல் ஃபீல்

105:1 யானைப் படையினருடன் உம் இறைவன் எப்படி நடந்து கொண்டான் என்பதை நீர் பார்க்கவில்லையா?

اَلَمْ يَجْعَلْ كَيْدَهُمْ فِيْ تَضْلِيْلٍ ۞٢

105:1 அலம்யஜ்(j)அல் கைத(da)ஹும் ஃபீத(tha) ஜ்(z)லீலி(d)வ்

105:2 அவர்களின் சதித்திட்டத்தை அவன் வீணடித்து விடவில்லையா?

## இதோ உங்கள் பிள்ளைச் செல்வங்கள்..!



பெயர்
ஹ.ஃப்ஸா - அயான்
பெற்றோர்
திரு & திருமதி அமானுல்லாஹ் கான்
புதுவை - இந்தியா
ஹவல்லி - குவைத்

# நனைந்தாள் ரிஸானா..! அழுதது உலகம்..!! ஏன்?



**இதனை எழுதும் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்கள், ரிஸானா சம்பவத்தை விமர்சிப்பவர்கள் எப்படியான நோக்கில் தங்களது விமர்சனத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டலையே வழங்கியுள்ளதாகவும், ரிஸானா சம்பவத்தின் பின்னணிகள் எவை? உண்மைகள் என்ன? என்பதை விமர்சனங்கள் செய்யும் ஊடகங்கள் வாயிலாகவன்றி நேரடியாக ஆராய்ந்து அறிந்திருக்கவில்லை எனவும் கூறுகின்றார்! (ஆ-ர்)**

**ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்** தலைவர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, இலங்கை

ரிஸானா நஃபீக்..!

உலகம் முழுவதும் உச்சரிக்கப்பட்ட பெயர்.!

நீதி சரிந்ததா? நிமிர்ந்ததா? என்று நீதியே இல்லாத உலகம் பேசிய பேசுபொருளின் கரு.!

இந்தச் சிறிய வயதில் முழு உலகையும் தன் பக்கம் ஈர்த்த சாதனையின் சொந்தம். ஏன் ரிஸானா இவ்வளவு பிரபல்யமானாள்?

இலங்கையின் ஒரு மூலையில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த அந்த சின்னவளை உலகம் ஏன் இவ்வளவு தூரம் தலைநிமிர்ந்து நோக்கியது.

அந்த அதிசயம் நிகழ்ந்ததற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது. ஆம் ரிஸ ானாவின் விடயத்தில் ஷரீஅத் நீதி சம்பந்தப்பட்டிருக்கிறது அவ்வளவுதான்..!

இவளைப் போன்ற எத்தனையோ ரிஸானாக்களை பலி கொடுக்கும் மேற்கத்திய நீதிகளை குறித்து இந்த உலகம் நீதிகளை அலட்டிக் கொள்ளவில்லை. பேச்சுபொருளாக அவற்றை எடுத்துக் கொள்ளவுமில்லை. எனினும் ஷரீஅத் நீதியை பேசுபொருளாக மாற்றி அதற்கு எல்லையில்லாத முக்கியத்துவத்தை உலகம் கொடுத்திருக்கிறது கொடுக்கத்தான் வேண்டும்.

ஷரீஅத் நீதியை உலகின் பேச்சுபொருளாக ஆக்கிய ரிஸானாவுக்கு எமது பிரார்த்தனைகள். ரிஸானாவின் உயிர் மீண்டும் உலகத்துக்குத் திரும்பி வராது. ஆனால் பல ஆயிரம் ரிஸானாக்களுக்கு உயிர் கொடுக்க ஷரீஅத் நீதி உலகை நோக்கி மீண்டு வரும். அப்போது உயிர் கொடுத்த ரிஸானா வாழ்ந்துக் கொண்டிருப்பாள்.

ரிஸானாவின் உயிருக்காக நல்லெண்ணத்தோடு அழுத முஸ்லிம் முஸ்லிமல்லாத அனைத்து உள்ளங்களையும் வாழ்த்திவிட்டு ரிஸானா நஃபீக்கின் விஷயத்துக்கு வருகிறேன்.

ரிஸானாவின் மரண தண்டனை குறித்து இதுவரை ஊடகங்களில் வெளியான செய்திகள் அனைத்தையும் தொகுத்து வகுத்தால் ரிஸானா நஃபீக் விஷயத்தில் இரண்டு விதமான அலசல்கள் நடைபெற்றுள்ளன.

அந்த அலசல்கள் இரண்டில் எதை உலகம் சரி கண்டாலும் ஷரீஆ நீதியை எவரும் குறை கூற முடியாது.

ஷரீஆ நீதி அந்த இரண்டு அலசல்களின்போதும் முன்வைக்கப்பட்ட கீழ்த்தரமான விமர்சனங்கள் கண்டனங்கள்

**ரிஸானாவின் உயிர் மீண்டும் உலகத்துக்குத் திரும்பி வராது. ஆனால் பல ஆயிரம் ரிஸானாக்களுக்கு உயிர் கொடுக்க ஷரீஅத் நீதி உலகை நோக்கி மீண்டு வரும். அப்போது உயிர் கொடுத்த ரிஸானா வாழ்ந்துக் கொண்டிருப்பாள்.**

என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றது.

அலசல் 01:

இந்த அலசலில் நீதி விசாரணை குறித்து பல வகையான விமர்சனங்கள் ஊடகங்களில் உலா வருகின்றன.

அவையாவன:

ரிஸானா குற்றவாளியல்ல. ஒரு சதிமோசக் கொலையை அவள் செய்யவில்லை. செய்ய வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. ரிஸானாவின் கையிலிருந்த குழந்தை இறந்ததற்கான காரணங்கள் விஞ்ஞானபூர்வமாகக் கண்டறியப்படவில்லை. அது இயற்கை மரணமாகவும் இருக்கலாம். அல்லது பால்புரையேறி மூச்சுத் திணறி குழந்தை இறந்திருக்கலாம். குழந்தை இப்படித்தான் இறந்தது என்பதைக் கண்ட சாட்சிகளும் இல்லை.இந்த நிலையில்.....,

அடுத்த இதழில்.., இறைநாடின்..!

http://www.facebook.com/vaalumvaraiporaadu











http://www.facebook.com/kavinnnn



http://www.facebook.com/Rizwana2k2




oneindia tamil


Oneindia Tamil @thatsTamil



கடந்த, 2012ம் ஆண்டில், பல வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள், இந்தியாவில் வசிக்கும் தங்களின் சொந்த பந்தங்களுக்கு 38 ஆயிரம் கோடி ரூபாயை அனுப்பியுள்ளனர். இவ்வளவு அதிக தொகையை, வேறு எந்த நாட்டினரும், தங்கள் நாட்டிற்கு அனுப்பாததால், அதிக பணத்தை பெற்ற நாடு என்ற ரீதியில், இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது.



http://www.facebook.com/ayesha.baksh



http://www.facebook.com/rimza.sherin








http://www.facebookcom/mohamed.ridhvan






http://www.facebookcom/mohamed.ridhvan


சந்தோஷம் என்பது நறுமணம் தரும் திரவியம் போன்றது. உங்கள் மீது அதனுடைய சில துளிகளாவது படாமல் உங்களால் அடுத்தவர் மீது அதைத் தெளிக்க முடியாது.




http://www.facebook.com/your.sameera




தன் உடலை வெளிக்காட்ட பெண்ணுக்கு சுதந்தரம் தரும் உலகம், அதே உடலை மறைத்துக் கொள்ளும் உரிமையைப் பேண மட்டும் எதிர்ப்புக் காட்டுவதேன்..?



http://www.facebook.com/sabreen.jaseeth








http://www.facebook.com/ungal.thozi




# 2012 கடந்து வந்த பாதை..!



சர்வாதிகார முபாரக் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் டாக்டர்' முஹம்மத் முர்ஸி எகிப்து நாட்டின் அதிபரானார்..!

## உதித்தது பாலஸ்தீனம்..!






தமிழகத்திலும் நாட்டிலும் தலைவிரித்தாடிய 'டெங்கு' காய்ச்சல் பல உயிர்களைக் காவு கொண்டது.



மலாலாவைத் தலையில் தூக்கி ஆடின ஊடகங்கள்..!முத்தாய்ப்பாக அவளுக்கு அமெரிக்க 'டைம்' பத்திரிகை நாயகி விருது கிடைத்தது.



தர்மத்தின் பெயர் கொண்ட தர்மபுரி.., 'அதர்மபுரி'-யாக மாறியது.கலப்பு மண சாதிப் பிரச்னையால் கொழுந்துவிட்டெரிந்தது நகரம்!



சென்னை தாம்பரம் அருகே, நிர்வாக அலட்சியத்தால்,பள்ளி வாகனத்திலிருந்த ஓட்டை வழியே விழுந்து ஐந்து வயது சிறுமி பலியான சம்பவம் நாட்டையே உலுக்கியது.



சென்னை,புனித மேரி பள்ளியில் ஒன்பதாவது வகுப்பு படிக்கும் மாணவன் தனது வகுப்பு ஆசிரியை அவர்களை கத்தியால் குத்தி கொலை செய்த கொடும் சம்பவம் பரபரப்பை உண்டாக்கியது.



**நித்யானந்தாவின் லீலைகள் மற்றும் அவர் மீதான வழக்குகள் நாள்தோறும் புதிது புதிதாக வெளி வந்த வண்ணம் இருந்தன.**

இரண்டாவது முறையாக ஒபாமா அமரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



வரலாறு காணாத வகையில் தமிழகம் முழுவதும் மின்வெட்டு அமலானது.



தில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி ஆறு பேர் கொண்ட காமுகக் கும்பலால் பலாத்காரம் செய்யப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் நாட்டையே உலுக்கியது.



# புனித ரமளான் அறிவுப்போட்டி 2012 முடிவுகள்!

| முஸ்லிம் அல்லாதார் | | புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவியோர் |
|---|---|---|
| குணம்<br>பெண் வெற்றியாளர் எவரும் இல்லை | 1 | அப்துர் ரஹ்மான் (கவியரசன் பாலையா)<br>சகோதரி மனால் (சுனாரா) |
| தக்ஷன் பிரஷாந்த்<br>பெண் வெற்றியாளர் எவரும் இல்லை | 2 | ஹம்மாத் அப்துல்லாஹ்(நடராசன்)<br>சகோதரி யாஸ்மின் (மலர்) |
| சாந்தவெழியன்<br>பெண் வெற்றியாளர் எவரும் இல்லை | 3 | தாரிக் (யுவராஜா)<br>சகோதரி ஸுஹா (மதிலதா சிவலிங்கம்) |
| நாகராஜா<br>பெண் வெற்றியாளர் எவரும் இல்லை | ஆறுதல் பரிசு | முஹம்மத் யூனுஸ் (கணேசன்)<br>சகோதரி ஃபாத்திமா (இந்திராணி) |

■ இந்தப் பெயர்கள் ஆண் வெற்றியாளர்களையும்

■ இந்தப் பெயர்கள் பெண் வெற்றியாளர்களையும் குறிக்கும்




வாழ்க்கையைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம்..!அழகிய தருணங்கள்.., ஆழிய அன்பை வெளிப்படுத்தும் உன்னத சாகசங்கள்.!சிறப்பான முறை வாழ்க்கை..!அனைத்து அம்சங்களும் உங்கள் வாழ்வின் உன்னத தாத்பர்யங்களை மிக நேர்த்தியாக்கிக் காட்டும்..! மாற்றங்களின் அனைத்து அம்சங்களையும், என்றும் பொருந்திப் போகும் மாறாத வாழ்க்கை சட்டங்களைக் கொண்டு முன்னெடுத்துச் செல்ல உங்களைத் தயார்படுத்துகின்றது வசந்தம்.சுறுசுறுப்பு,சுவாரஸ்யம் அத்துடன் கொஞ்சம் ஆகுமான குறும்புத்தனமும் நிரம்பியதாய் புதுமையுடன் உங்களைக் கவர்ந்து அணைத்துக் கொண்டு நடைபோடுகின்றது..!




**வசந்தம்** உங்கள் இருமை வாழ்வின் முன்னேற்றத்துக்காக எப்போதும் உங்களுடன்..!

தொடர்புக்கு 97266683 - 97848068 vasanthammonthly@yahoo.com

வாழ்வியல் | குடும்பவியல் | ஒழுக்கம் | வழிபாடு | சமூகம் | ஆளுமை | கல்வி | கவிதை
மழலையர் | ஆய்வு | பேட்டி | மகளிர் | நிகழ்வுகள் | உலகம் | தேசம் | போட்டி

இணையம் மற்றும் சமூக வலைதளங்களிலும்..!

# 2013

# வசந்தம்

மாத இதழ்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!










## ஜனவரி

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## ஃபிப்ரவரி

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

## மார்ச்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## ஏப்ரல்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## மே

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## ஜூன்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## ஜூலை

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## ஆகஸ்ட்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## செப்டம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## அக்டோபர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## நவம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## டிஸம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

**வேற்றுமையில் ஒற்றுமை.!**

**பாரதத்தின் வலிமை..!!**



தொடர்புக்கு 97266683 - vasanthammonthly@yahoo.com